தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மார்ச் 20, வெள்ளிக்கிழமை.

பங்குனி 6, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.”

பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும், வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவன் அரசன்.

1. இரங்கற் குறிப்பு.

அரியலூர் அருகில் ஏற்பட்ட ரெயில் விபத்துக்குள்ளாகி இறந்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 14—3—1987 ஆம் தேதியன்று இரவு சென்னையிலிருந்து புறப்பட்ட மலைக்கோட்டை விரைவு இரயில் வண்டி, 15—3—1987 ஆம் தேதி அன்று அதிகாலை திருச்சி மாவட்டம் அரியலூர் அருகேயுள்ள மருதையாற்றுப் பாலத்தில் சென்று கொண்டிருந்த போது வெடிகுண்டு வைக்கப்பட்டதன் காரணமாக விபத்துக்குள்ளாகி அதனால் பலர் உயிரிழக்க நேரிட்டதையும், பலர் படுகாயமுற்றதையும் இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். விபத்திலே காயமுற்றவர்கள் விரைவிலே குணமடைய இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். விபத்திலே உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்

பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தக் கொடூரமான வன்முறைச் செயலில் ஈடுபட்டவர்களை இப்பேரவை சார்பிலும், என் சார்பிலும் கண்டிக்கிறேன். விபத்திலே உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

2. 1987-88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம்—அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1987-88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தினை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே!

1986-87 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1987-88 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், ** இந்த அவையின் ஒப்புதலைப் பெற வேண்டி, அவையின் முன் வைக்கும் கடமையை நிறைவேற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி

என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் பொன்மொழியாகும். கொடை வழங்குதல், அருள்புரிதல், செங்கோல்முறை பேணுதல், குடிகளைப் பாதுகாத்தல் ஆகிய நான்கு பண்புகளையும் உடைய அரசு, அரசு இனத்திற்குள்ளேயே ஒளிபொருந்திய ஒன்றாகும்

மாண்புமிகு நிதி அமைச்சரின் உரை ஆங்கிலத்தில் 65—105 பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

** 107—185 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது